பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QB/89/78

மலர்: 21 மாசி 7 இதழ்: 9
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-2-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS ★ LIBRARY
RECEIVED 1979-2-19
PERIODICALS DIVISION

## அரசியலமைப்புத் திருத்தத்தில் கூட்டணி

### 21ந் திகதி செயற்குழு கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

கட்சியிலிருந்து நீக்கப்படும் எம். பி.க்கள் எம் பி பதவியில் இருந்தும் நீக்கப்படவேண்டுமென்ற இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பு விதியில் இம் மாதம் 22-ந் திகதி பாரளுமன்றத்தில் திருத்தம் கொண்டுவரப்படும்போது அது சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி என்னவிதமான போக்கைப் பின்பற்றும் என்பது இம் மாதம் 21-ந் திகதி கொழும்பில் கூட்டணித் தலைவரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படுமென்று அறியப்படுகிறது.

அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோதும் அதற்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டபோதும் கூட்டணி எம். பிக்கள் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்ததுபோலவே இத் திருத்தப் பிரேரணை விவாதத்திலும் ஒதுங்கியிருக்குமென்றே கருதப்படுகிறது.

21ந் திகதி நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் மட்டக்களப்பு முதலாவது எம் பி திரு. செ. இராசதுரையின் விவகாரமும் ஆலோசிக்கப்படுமென்றும் முன்னைய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி நடவடிக்கைக்குழு கூட இல்லையாதலால் 21-ந் திகதிக் கூட்டத்தில் இதுபற்றி மீண்டும் ஒருமுடிவு எடுக்கப்படமாட்டாதென்றும் கூறப்படுகிறது.

# சீன-வியட்நாம் யுத்தம்: உலக நாடுகள் கவலை!

## பாரத அமைச்சர் வாஜ்பாய் பயணத்தை முடித்துத் திரும்பினார்

### சீனாவின் ஆக்கிரமிப்பு என ரஷ்யா கண்டனம்

(நியூயோர்க்)

சீனாவுக்கும் வியட்நாமுக்குமிடையில் மூண்ட சண்டை, இப்போது கடும் யுத்தமாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பது குறித்து உலக நாடுகள் பலவும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன. சோவியத் யூனியனுடன் வியட்நாம் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ளதால் இதில் சோவியத்யூனியன் தலையிடலாம் என்று நியூசிலந்து அச்சம் தெரிவித்திருக்கிறது.

ஆனால் இந்த யுத்தம் ஆசியாவில் பரவமாட்டாது என்று ஜப்பான், எகிப்து உட்படப் பல உலக நாடுகள் இச்சண்டை பற்றிக் கவலை தெரிவித்துள்ளன. சீனாவின் அப்பட்டமான ஆக்கிரமிப்பு எனச் சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

சோவியத்யூனியன் தலைநகர் மாஸ்கோவில் உள்ள சீனத் தூதரகத்தின் முன் இன்று சுமார் 200 மாணவர்கள் வியட்நாமுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சீன-வியட்நாம் எல்லைச்சண்டை குறித்து பாப்பரசர் இரண்டாவது அருளப்ப சின்னப்பர் கவலை தெரிவித்துள்ளதுடன், சமாதானத்தை பாதுகாக்குமாறும்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீன-வியட்நாம் எல்லை நெடுகிலும் சீனத் துருப்புக்களுக்கும், வியட்நாமியத் துருப்புக்களுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டிருப்பதையடுத்து, சீனாவில் சுற்றுப்பயணஞ் செய்துகொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. அடல்பிகாரி வாஜ்பாய் தமது பயணத்தை ஒரு நாள் முன்னதாக முடித்துக்கொண்டு நாடு திரும்புகின்றார்.

### இந்தியாவின் ஆழ்ந்த கவலை

சீன-வியட்நாம் யுத்தம் பற்றி இந்தியாவின் ஆழ்ந்த கவலையை அமைச்சர் வாஜ்பாய் அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறார்.

கம்பூச்சியா, வியட்நாம் பிரச்னைகளை ஒன்றுக்கொன்று இணைக்கக்கூடாதென்றும் இந்திய அமைச்சர் வாஜ்பாய் சீன வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்திருக்கிறார்.

சீனத் துருப்புக்கள் வியட்நாமுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும், இந்த அப்பட்டமான ஆக்கிரமிப்புக் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி வியட்நாம், ஐ. நா. செயலாளருக்கு விண்ணப்பித்துள்ளது. எல்லைச் சண்டை பற்றிச் சீனாவும் ஐ. நா. வுக்குப் புகார்செய்துள்ளது.

### வாபஸ்பெற கோரிக்கை

வியட்நாமிலிருந்து தனது படைகளைச் சீனா வாபஸ்பெற வேண்டுமென்றும், கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் தனது படைகளை வாபஸ்பெறவேண்டு

[6-ம் பக்கம் பார்க்க]

## தொண்டர்களைத்தான் எம். பிக்களையல்ல

### 'அமிர்' தெரிவிக்கும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

"கூட்டணி எம் பிக்கள் மாதத்தில் 4 மணித்தியாலமாவது விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணிக்கவேண்டும்" எனத் தாம் பேசவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபருமான திரு அ. அமிர்தலிங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்காரியாலயத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற யாழ்ப்பாணம், மானிப்பாய், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறைத் தொகுதிகளின் மூலக் கிளை நிர்வாகிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் தொடர்பாக திரு அமிர்தலிங்கம் பேசியதாக "கூட்டணி எம் பிக்கள் மாதத்தில் 4 மணித்தியாலமாவதுவிடுதலைக்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்!' என்ற தலைப்பில் "ஈழநாடு" 18-2-79 வெளியான முன்பக்கச் செய்தி குறித்து திரு அமிர்தலிங்கம் பின்வரும் விளக்கத்தை நேற்று அளித்தார்.

".தமிழ் அகதிகள் புனர்

[6-ம் பக்கம் பார்க்க]

## காணாமல்போன மீனவர் பாம்பனில் ஒதுங்கினர்

[பண்டத்தரிப்பு]

மயிலிட்டியிலிருந்து மீன் பிடிக்கச்சென்று காணாமல் போன மூன்று கடற்றொழிலாளரும் இப்போது தமிழ்நாட்டில் பாம்பனில் கரையொதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவர்களைத் திருப்பிக்கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம் பியுமான திரு அ அமிர்தலிங்கம் மேற்கொண்டிருக்கிறார்.

சிறீஸ்கந்தராசா, செல்வநாயகம், ஸ்ரனிஸ்லொஸ் என்ற மூன்று கடற்றொழிலாளரும் மீன்பிடிக்கச் சென்ற படகு இயந்திரக் கோளாறு காரணமாக பாம்பன்கரையை அடைந்துள்ளதாம்.

### மார்ச் 15-க்குள்

## ஆசிரியர்களைச் சேர்க்கத் தவறின் நேரடி நடவடிக்கை

### இ. ஆ. சங்க யாழ். மாவட்டக் கிளை தீர்மானம்

[கொக்குவில்]

"மாணவர்கள் பகிஷ்கரிப்பு நாட்களில் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு அடுத்தமாதம் 15ம் திகதிக்கு முன் வேலை வழங்கல் வேண்டும்."

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக்கிளை செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டம் இலங்கை மலாயர் சங்க மேல்மாடியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சங்கத் தலைவர் ச கி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குஅடுத்த மாதம் 15-ம் திகதிக்கு முன் மீண்டும் வேலைவழங்கத் தவறின் இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக் கிளை நேரடி நடவடிக்கையில் குதிப்பதெனவும், தெற்கே உள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தினரை போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோருவதென்றும் இதற்கு முதல்நடவடிக்கையாக இம்மாதம் 21ம் திகதி விசேஷ பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், பொதுக்கூட்ட அனுமதியுடன் ஏனைய ஆசிரிய தொழிற்சங்கங்களையும் அழைத்து இறுதி முடிவு செய்வதெனவும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க ஏடான 'ஆசிரியர் குரலை' கூடியவிரைவில் யாழ்ப்பாணத்தில் வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் பதவி

(6-ம் பக்கம் பார்க்க)

## "பல்கலைக்கழக அனுமதி: எவ்வித பேச்சுமில்லையே"

(கொக்குவில்)

மாணவர்களது பாடசாலைப் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து உருவாகிய பட்டதநிலை நீங்கிவிட்டதென அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், சில ஆசிரியர் தொழிற்சங்கங்களும் நன்றி நவிலல் பிரேரணைகள் அனுப்பியுள்ளனர். மாணவர்கள் முன்வைத்த பல்கலைக்கழக அனுமதி பற்றி எவ்வித பேச்சுமேயில்லை. இது, க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், ஏனைய மாணவர்களுக்கும், பெற்றோ

[6-ம் பக்கம் பார்க்க]

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தீர்மானங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில், பாடசாலை நிர்வாகக் கிளையில் கடமை புரியும் ஊழியர் ஒருவர் ஆசிரியர்களுடன் முறையீனமாக நடந்துகொள்வதால் உடனடியாக அவரை அவ்விடத்தில் இருந்து மாற்றி, அப்பதவிக்கு வேறொருவரை நியமிக்குமாறு கல்வியதிபதியைக் கோருகின்றோம்.

இவ்வாறு கோரும் தீர்மானத்தை, நேற்று முன்தினம் கூடிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையில் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு சங்க உப தலைவர் திரு. வின்சன்ட் தலைமைவகித்தார்.

சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை அதிபர் பதவி வகிப்பவருடைய நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுமை

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உடையார் ஒழுங்கை இளவாலையில் மரியாதையானவர்கள் சூழலில் கொன்வென்ற். ஆண்கள் கல்லூரிக்கு அண்மையில் ஒரு பரப்பும் வீடும் விற்பனைக்கு உண்டு விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.1645, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம், 1645

கோப்பாய் நாவலர் வித்தியாசாலைக்கு அருகாமையில் வாசிகசாலை ஒழுங்கை, மதவடி ஒழுங்கை ஆகிய இருபக்கங்களாலும் பாதையுள்ள, கிணறு, தென்னை, பனை வரும்படியுள்ள வீடு கட்டக் கூடிய காணி மலையாளங்காடு 13 பரப்பு 16·3 குழி விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி: திருமதி ப. சிவகுமாரன் ஐயனார் வீதி, சுன்னாகம். 1677

### தேவை

ஊதுபத்தி தயார் செய்ய வேலைதெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். ஆ. இராசையா அன்சன் இன்டஸ்றீஸ், முத்திரைச் சந்தையடி, யாழ்ப்பாண. 1682

### வெற்றுச்சாக்குக் கேள்வி விளம்பரம்

கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 7,000க்கும் அதிகமான வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கிருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டிக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சில் வைத்த கேள்விகள் யாவும் 3-3-79ந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்குக் கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும். அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

பதில்பொதுமுகாமையாளர்
கரவெட்டி,
15-2-79. 1655

### தேவை

பிரத்தியேகச் செயலாளர் தேவை. கல்வித் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். ஆசிரியர் அறிவுப்பொழில், கணேசானந்தா சில்க்பலஸ், 15, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 1683

**மு. க. முத்துக்குமார்,**
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

### பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்,**

கரணவாய் வடக்கு நவிண்டில் காலஞ்சென்ற சின்னத்தம்பி விசுவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்:

மரணமெய்தியவர்
சின்னத்தம்பி விசுவலிங்கம் கைம்பெண் தங்கம்மா 'பாக்கியஸ்தான்', நவிண்டில், கரவெட்டி.
மனுதார்,

மரணசாதன)
நியாயாதிக்கம்} இல. 1058

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணக்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளவர் எவரும், 1979 ஆம் ஆண்டு, மாசி மாதம், 16 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**க. விஸ்வலிங்கம்,**
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு, மார்கழி மாதம் 28 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
1673

## ஆழ்வாப்பிள்ளை காலமானார்

[கொழும்பு]

அரசாங்க சேவையில் பல முக்கிய பதவிகளை வகித்த திரு கோ ஆழ்வாப்பிள்ளை நேற்றுமுன்தினம் காலமானார். கொழும்பு தமிழ்ச்சங்கத்தலைவராகவும் திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவராகவுமிருந்து தமிழ்சமயத்தொண்டுகள் பல ஆற்றிய திரு. ஆழ்வாப்பிள்ளை உணவுக்கமிஷனராகவும், உணவு அமைச்சின் செயலாளராகவுமிருந்து பலரதும் பாராட்டைப் பெற்றிருந்தார். யுத்த காலத்தில் நாட்டில் பட்டினி ஏற்படாதவகையில் காப்பாற்றியது இவரது குறிப்பிடத்தக்க சேவையாகும். பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தலைவராகவும் இவர் இருந்தார்.

அன்னாரது ஈமச்சடங்கு கனத்தை மயானத்தில் நடைபெற்றது. (கொ. நி

**இ. பாலசுப்பிரமணியம்**
சட்டத்தரணி,
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.

யாழ்ப்பாணம், அம்மன் வீதி இல. 10 ஐ சேர்ந்த காலஞ்சென்ற பரமநாயகம் ஸ்ரீகாந்தா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்
யாழ்ப்பாணம் அம்மன்வீதி இல 10 ஐ சேர்ந்த பரமநாயகம் ஸ்ரீகாந்தா கைம்பெண் பிமலா.
மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 3382

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.

1979 ஆம் ஆண்டு தை மாதம் 29 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
1681

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# கட்சி வெளியேற்றினாலும்— சபை ஏற்றுக்கொண்டால் தொடர்ந்து எம். பி.?

[கொழும்பு]

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசிலமைப்பின் இரண்டாவது திருத்தம் பாராளுமன்றத்தில் இம் மாதம் 22ந் திகதி சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப் படவிருப்பதாகத் தெரிகிறது.

அரசியல் கட்சியொன்றைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டாலும் தொடர்ந்தும் அவர் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கத்தக்க விதத்தில் இந்த இரண்டாவது திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது.

தற்போதுள்ள அரசியலமைப்பின்படி, உறுப்பினர் ஒருவர் அவர் சார்ந்த கட்சியால் கட்சியிலிருந்து விலக்கப்பட்டால் தமது பாராளுமன்ற உறுப்பினர் ஆசனத்தையும் இழந்தவராவார், எனினும், அவர் அதுபற்றி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

புதிய திருத்தத்தின்படிகட்சியிலிருந்து உறுப்பினர் ஒருவர் விலக்கப்பட்டாலும் சபை உறுப்பினர்களில் 85க்கு மேற்பட்டோர் ஆதரவாக வாக்களிப்பின் அவர் தொடர்ந்தும் சபையில் உறுப்பினராக இருக்க வகை செய்யும் விதத்தில் இத்திருத்தம் அமையலாமென்று அறியப்படுகிறது.

இப்புதிய திருத்தம் பற்றி உயர்நீதிமன்றம் நாளை ஆராயும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவால் இத்திருத்தம் தேசிய நலனுக்கு அவசியமானதாக உயர்நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்திருத்தம்பற்றி பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழு இம் மாதம் 22ம் திகதி கூடி ஆராயவிருக்கிறது. [ம-இ]

# "குழந்தையின் பல்வளர்ச்சிக்குத் தாயின் போஷாக்கு அவசியம்"

(மாங்குளம்)

"தாயின் வயிற்றில் கர்ப்பமாகி ஆறு வாரங்களிலேயே பல் அரும்பத் தொடங்குகிறது. கர்ப்பத்தில் உள்ள குழந்தையின் பல்வளர்ச்சிக்குத் தாய் போஷக்குள்ள நல்ல உணவுகளை உண்ணவேண்டியது முக்கியம் பல் உணவு உட்கொள்ளுவதற்கும் அழகுக்கும் மாத்திரமல்ல, சொல்லுக்கும் முக்கியமாகும்."

யாழ். லயன்ஸ் கிளப் அங்கத்தவரும் பல்வைத்திய நிபுணருமான டாக்டர் கே. நித்தியானந்தன் வவுனியாவில் நடைபெற்ற லயன்ஸ் கிளப் கருத்தரங்கில் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் டாக்டர் கே. நித்தியானந்தன் மேலும் பேசுகையில், 'பிறக்கும் போதே பல்முரசில் மேற்சொண்டில் ஊனம் இருப்பின் அப்படியான குழந்தைகளுக்குச் சத்திர சிகிச்சை மூலம் அக் குறைபாட்டினை நீக்கலாம். யாழ்ப்பாணத்திலுள்ள எனது பல்வைத்திய நிலையத்திலும் கைதடிசைவஅநாதைஇல்லம், திருநெல்வேலி சைவ அநாதை இல்லம் இவற்றிலுள்ள குழந்தைகளுக்கும் இலவச பல்சிகிச்சை அளித்து வரும் நான் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் இலவசமாக சிகிச்சை அளிப்பதற்கு ஆயத்தமாகவுள்ளேன்' என்றார் (அ)

## முருங்கனில் இன்று உதைபந்தாட்டம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி அருணோதயா விளையாட்டுக் கழகத்தினருக்கும் முருங்கன் உதைபந்தாட்டக் கழகத்தினருக்கும் இடையிலான சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்றுமாலை முருங்கன் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது. (அ)

## இடமாற்றம்

[அரியாலை]

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் அதிபரும், சமாதான நீதவானுமான திரு. நா. இராமலிங்கம் இம்மாதம் 15ம் திகதி தொடக்கம் யாழ். ஆனந்தாவித்தியாசாலைக்கு அதிபராக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். (அ)

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

[அரியாலை]

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட வைரவிழாவையொட்டி மிகச்சிறந்த வகையில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளும், வாணவிளையாட்டுப்போட்டியும் நடாத்த வைரவிழாக்குழுவினர் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இத்துடன் கலை, கலாச்சாரப் போட்டிகளும், நாடகப் போட்டியும், விளையாட்டுப் போட்டியும் நடாத்த ஏற்பாடுகள் வருகின்றன. இவ்வைரவிழா ஏப்ரல் மாதம் நடைபெறும். [அ]

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

சின்னத்தம்பி கைம்பெண் பொன்னம்மா
பொன்னாவளை, களபூமி, காரைநகர்.
—வழக்காளி

வழ. இல: காசு. சு. 334

எதிராக

1. பரமு பொன்னம்பலம், கரப்பிட்டியத்தனை. பிள்ளையார் கோவிலடி, களபூமி, காரைநகர்.
2. பொன்னம்பலம் ஆறுமுகம், சொம்பாவோடை, களபூமி, காரைநகர். — எதிராளிகள்.

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் (ரூபா. 2600/90) ஈராயிரத்தி அறுநூறு சதம் தொண்ணுறையும் அத்துடன் ரூபா. 1690க்கு 7-4-78 தொடக்கம் 14-7-78 திகதி வரை 12% வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் முழுவதும் கொடுக்கும் வரை 5% வட்டியும் இவ்வழக்கின் செலவு ரூபா 430/95 அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1979-ம் ஆண்டு பங்குனி மாதம் வியாழக்கிழமை 15-ந் திகதி காலை 10 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாணமாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை "கிழுவனை சடையாத்தனை" நெ. பர. 39 இதில் கிழக்குப் பக்கமாக சீதனமாகக் கொடுக்கப்பட்ட நெ பர 22 நீக்கி மிகுதி நெ. பர. 17 ஆனல் அளவின்படி நெ பர 9 எல்லை கிழக்கு சண்முகம் பெண் செல்லம்மாவின் ஆதனம் வடக்கு மார்க்கண்டு நவரத்தினத்தின் ஆதனம் மேற்கு மாதாகோவில் ஆதனம் தெற்கு சண்முகம் ஆறுமுகத்திற்கும் பரமநாதன் பெண் ஈஸ்வரிக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலிற் சொரியலாய் 3/4. பதிவு இலக்கம் 323/5 ச 481/55

பிஸ்கால்
**பொ. பாக்கியநாதன்.**
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
15-2-79. 1664


# எஸ்.பி. சாமி அன் கொம்பனி

193, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7025

**J. L. மொறிசன் சன் அன் ஜோன்ஸ் லிமிட்.**
ஸ்தாபனத்தாரின் விவசாய இரசாயனப் பொருட்களுக்கு வடபகுதி ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
உங்களுக்குத் தேவையான

∵ மொறிசிட் ∵ எலோறால் ∵ 34 டி. பி. ஏ.
∵ றேகோர் ∴ மன்கோசெப் ∵ எம். சி. வி. ஏ.
∴ மொறெக்ஸ் ∵ குப்றுல் ∵ கொம்பிளசால்

ஆகிய விவசாய இரசாயனப் பொருட்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

# மக்கள் கருத்து

## மீசாலை வீரசிங்கம் ம. வி.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய சுவீகரிக்கப்பட்ட ஆதனங்கள் ஒழுங்கு முறைகள் பலவருடங்களாக குன்றியநிலை நிலவி வருவதை அதானித்து அதிபருக்கும் வடமாநிலக் கல்வி அதிபருக்கும், கல்வி மந்திரிக்கும் பல கடிதங்கள் எழுதப்பட்டன. பதிலும் இல்லை, நிர்வாகத்தில் திருத்தங்களுமில்லை. அரசாங்கத்தின் கொள்கை கிராமப் பாடசாலைகளில் கவனம் செலுத்துவது என்பது சொல்லளவிலும் எழுத்தளவிலும் தான் இருக்கிறதா? பாடசாலை மதிலில் எழுதப்பட்ட சொற்றொடர்கள் அருவருப்பை உண்டாக்குகின்றன. பாடசாலை விளையாட்டு மைதானக் கம்பிவேலி ஒன்று வெட்டப்பட்டது. மற்றும் ஒருவேலி கவனிப்பாரற்று இருக்கிறது மற்றொரு எல்லை வேலி போடுவதற்கு முடியவில்லை. பாடசாலை ஸ்தாபகர் தின விழா, பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம், பழைய மாணவர் சங்கம் இவை பற்றிச் சிந்திக்கப்படவில்லை. பாடசாலை ஸ்தாபகர் நினைவுத்தூபி அமைப்பதற்கு நிலம் ஒதுக்கப்பட்டிருந்தும் நிலத்திற்குவேலிகள் போட்டு ஆக்கவேலை ஆரம்பிப்பதற்கு பதினைந்து ஆண்டுகட்கு மேலாகியும் ஆயத்தமில்லை.

வருடந்தோறும் ஆயிரக்கணக்கில் வருமானம் கொடுக்கும் சுவீகரிக்கப்பட்ட ஸ்தாபகரின் காணிகள் இருந்தும் ஸ்தாபகர் விழா தக்கமுறையில் கொண்டாடப்படாமையும் அவரது நினைவுத்தூபி ஆரம்பிக்கப்படாமலிருப்பதும் கவலைக்குரியது.

அ. குமாரசாமி
திருநெல்வேலி.

## நாட்டுக் கூத்துக்குப் புத்துயிர் அளித்தவர் 'வித்தி'

**- கலையரசு க. சொர்ணலிங்கம் -**

சு. வித்தியானந்தனின் பெயர் அடுத்துவரும் நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்துத் தமிழ் மக்கள் மனதில் நிறைந்திருக்கும் என்று திடமாகச் சொல்லலாம். அவர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் இருந்ததும் யாழ் வளாகத்திற்குத் தலைவராய் இருந்ததும் யாழ் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தராய் இருப்பதும் பெரும் பதவிகள்தான். ஆயினும் அவர் நாடகக் கலைக்குச் செய்து வரும் அரும் பெரும் தொண்டே அவரை மக்களின் மனதைவிட்டு அகலாது இருக்கச் செய்யும் மங்கிப் போயிருந்த நமது தேசிய நாடகக் கலைக்கு (நாட்டுக் கூத்துக் கலைக்கு) புத்துயிர் அளித்து வளர்த்தவர் அவர். நாட்டுக் கூத்து எங்கெல்லாம் ஆடப்பட்டு வந்ததோ அங்கெல்லாம் சென்று அங்குள்ள அண்ணாவிமாருடன் கலந்து ஆலோசித்து, தற்காலத்திலுள்ளோர் இரசிக்கத்தக்க வகையில் புதிய மாற்றங்களைப் புகுத்தினர். பல்கலைக்கழக மாணவ மாணவியரைக் கொண்டு அவற்றை நடிக்கச் செய்து மக்களைப் பிரமிக்கச் செய்துள்ளார். அவற்றின் கலையம்சச்சிறப்பினை மக்களுக்கு எடுத்துக் காட்டினார். இப்போது நாட்டுக் கூத்துக்கள் பல இடங்களிலும் ஆடப்படுவதோடு வானொலியிலும் சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறது. இவர் இதில் சேவை செய்திராவிட்டால் இக்கலை முற்றாக அழிந்து போயுமிருக்கலாம்.

கலாநிதி வித்தியானந்தனை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத்தான் எனக்குத் தெரியும். ஆயின் இவரது தந்தையார் எனது நண்பருள் ஒருவர். அத்துடன் அவரது சகோதரி என்னுடைய பத்தினியருடன் இராமநாதன் கல்லூரியிலே படித்தவர். முன்பெல்லாம் நாங்கள் கீரிமலைக்குப் போய் மீளும் பொழுது இவரது இல்லத்திற்குப் போனதுண்டு. ஆனால் அச்சமயங்களில் இவரைக் கண்டதாக ஞாபகம்இல்லை.

இவரை முதன் முதலாக நான் சந்தித்தது இலங்கைக் கலைக் கழகத்தின் தமிழ் நாடகக் குழுக் காரியசபைக் கூட்டங்களிலேதான். அப்போது இவர் ஒரு மெலிந்த இளைஞனாய்ப் பேராசிரியர்கணபதிப்பிள்ளையுடன் வருவதுண்டு. பின்பு அக்குழுவுக்கு இவர் தலைவராய் வந்த போது இவருடன் நெருங்கிப் பழகி நண்பனானேன். இவர் தலைவராக இருந்த காலத்தில் நாடகக் கலையை வளர்ப்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி இம்மட்டு என்று சொல்ல முடியாது. இவரின் ஆர்வத்தைக் கண்டு நானும் என்னாலியன்ற உதவிகளையும் ஒத்தாசைகளையும் புரிந்துவந்தேன். அந்தக்காலத்தில் ஈழத்தின் பல இடங்களிலுமிருந்த பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டி நாடகங்கள் எத்தகைய சிறப்பாக இருந்தன என்பது யாவருமறிந்த விஷயம். இவை சிறப்புற அமையக் காரணராயிருந்த இவரைப் பாராட்டுவது மிகவும் உகந்ததே.

ஒருவர் கலைச் சேவை செய்வதற்கு அவரது மனைவி மக்கள் உதவியும் ஒத்தாசையும் புரிபவர்களாக இருக்க வேண்டும். நான் சொல்வது கலையைக் கொண்டு பணம் உழைப்பவரைப் பற்றியல்ல, கலையை வளர்ப்பதற்காக அதில் ஈடுபடுபவரைப்பற்றியே யாகும் வெறுப்போ, மறுப்போ காட்டுபவர்கள் இல்லத்தில் இருந்ததால் ஒன்றும் செய்ய முடியாது. இவ்விடயத்தில் திரு. வித்தியானந்தன் அவர்களுக்கு சிறந்த இல்லத்துணைவி கிடைத்தது. அவர் செய்த பாக்கியமும் நாடகக்கலை செய்த பாக்கியமும் என்றே சொல்வேன். வாழ்க துணைவேந்த வித்தியானந்தன் அவர்களும் அவரது குடும்பத்தினரும். (அ)

### இன்று புண்ணியநாச்சி அம்மையார் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் ஆதரவில் புண்ணியநாநாச்சி அம்மை நினைவு தினம் இன்று திங்கட்கிழமை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் சபைத்தலைவர் திரு. ச. செல்வராசாதலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பராமச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பமாகும்.

யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம், 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு. நமசிவப்பிரகாசம் ஆகியோர் உரையாற்றுவர். [அ[

## தம்பர் நினைவாஞ்சலி

# அல்லலுற்றமக்களின்துன்பம் துடைத்த ஆசிரியஜோதி

**-- ப. சந்திரசேகரம் எம். ஏ. --**

(மனிதவியற்பண்பியற்பீடம் கொழும்புப்பல்கலைக்கழகம்)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உதயமாகிய கலைக் கோயிலாம் யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஈழவளநாட்டின் கலங்கரை விளக்கமாகும். ஏறக்குறைய 150 வருடங்களாக நிலைத்து நிற்கும் கல்விப்பணி புரிந்து வரும் இக்கூடத்தில் மூன்று தலைமுறைகளாக ஏறக்குறைய தம்பர் பரம்பரை கல்விப்பணியும், சமூகப்பணியும் ஆற்றியது, மத்திய கல்லூரியின் வரலாறும், தம்பர் மரபும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை.

நியமத்தின்படி விஞ்ஞான ஆசிரியராக விளங்கிய இப்பேராசான் ஒரு கூட்டு மேதாவி என்றே கொள்ளப்படலாம். வாழ்நாள் முழுவதும் கருத்து ஓவியம், எழுத்து ஓவியம், சாந்தத்தில் எழுத்த சொல்வன்மை ஆகியவற்றினால் மாணவர்உலகத்தினையும் மக்கள் உலகத்தினையும் கவர்ந்தார். விஞ்ஞானக் கலையையும், முருகியற் சுவையையும் ஒன்றிணைத்து கருத்துச்செறிவுள்ள உரைகளை நிகழ்த்தியவர் இவர். 'கலசம்' எனும் தலைப்பில் இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆற்றிய சொற்பெருக்கு, இன்றும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் அவரதுமாணவனாயிருந்த பாக்கியம் பெற்ற எனது மனதில் பதிந்துள்ளது. விஞ்ஞான ஆசிரியராய் விளங்கிய இவர் மத்திய கல்லூரியில் கலைத்துறைப் பட்டதாரிகள் பலர் கற்பித்த போதிலும், பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் அரசியல் எனும் பாட ஒழுக்கத்தினை திறம்படக் கற்பித்தார்.

### மாணவர் உயர்வு எவ்வாறு ஏற்படுகிறது

மாணவர் உயர்வு ஆசிரியர் தகைமையில், உயர்வில் தங்கியிருக்கிறது எனும் கருத்து இவரது தாரக மந்திரமாக விளங்கியது. கடந்த நாற்பது ஆண்டுகளுள் நமது நாட்டு ஆசிரியர்களின் தரமும், நிலையும் மதிப்பும் உயர்வதற்காக அயராது உழைத்தவர்களுள் ஆசிரியர் தம்பர் சிறந்த இடம் பெறுவார். அகில இலங்கை ஆசிரியர் சங்கம்மூலமும், வடமாகாண ஆசிரியர் சங்கம் மூலமும் 'இலங்கை ஆசிரியன்' போன்ற சஞ்சிகைகள் மூலமும் இவர் புதுமைக் கருத்துக்களை எடுத்துரைத்து ஆசிரிய உலகுக்கே மகத்தான இடத்தைத் தேடிக் கொடுத்தார்கள். ஆசிரியன் வாழ்க்கை ஆசிரியன் என்பது இவரது தாற்பரியம் முதல்முதலாக நம் நாட்டில் அமைக்கப்பட்ட கல்வி ஆலோசனைச் சபையில் இடம்பெற்று இந்நாட்டில் ஒரு கல்வித்தத்துவத்தையே உருவாக்க முயன்றவர் இவர். பல்கலைக்கழகச் சபையிலும் இடம்பெற்று. பல்கலைகழகத் தத்துவத்தினையே உருவாக்குவதிலும் இவர் பங்கு பெற்றார்.

### ஆசிரியன்ஒரு சமூகச் சீர்திருத்தவாதி

ஆசிரியன் ஒரு நாட்டின் சமூகச் சீர்திருத்தவாதி எனும் கொள்கையை மனமார ஏற்றுக் கொண்ட இவ்வாசிரிய ஜோதி, சமூகத்தில் ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, அல்லலுற்று வாழ்ந்த மக்களின் துன்பம் துடைத்தார். இறைவன் சந்நிதானத்திலும். கலைமகளின் உறைவிடமான கலைக்கூடங்களிலும் தாழ்த்தப்பட்டமக்கள் என்று கருதப்பட்ட மக்கள் சென்று வழிபட ஏற்க முடியாதகாலம், தம்பர் வாழ்ந்த காலம். இந்த நோயினைத் தகர்த்தெறிவதற்கு, எல்லோருக்கும் பள்ளிக்கூடங்களில் கல்வி அளிப்பது முக்கியம் எனக்கொண்ட சமூகத் தொண்டன் தம்பர், இவ்வியக்கத்தில் ஈடுபட்டு மகத்தான வெற்றியும் கண்டார்.

இலங்கையிலேயே கூட்டுறவு இயக்கம் சிறந்து நோக்கி வளர்ந்ததற்கு மூலகர்த்தா தம்பர் என்றால் அது மிகையாகாது.

இந்நாட்டு இளைஞர்களின் இயக்கத்திலே விடுதலை உணர்வினைப் பாய்ச்சுவதில் தமது வாழ்வின் முழுப்பகுதியையும் அளித்தவர் இவர். அந்நிய ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெற வேண்டும் என்பதற்காக அன்னார் போன்றோர் காட்டிய ஊக்கமும், உருவாக்கிய உற்சாகமும், யாழ்ப்பாண வாலிபர் சங்கமாக உருவாகி, இளைஞர் சங்கமாக அமைந்தது. பாரத நாட்டு அகில பாரத தேசிய சங்கத்தின் வழியில் நின்று நாட்டின் விடுதலை பெறமுயன்ற பல இளைஞர்களும் அறிக்கைகளும் இச்சங்கத்தின் கைங்கரியங்களில் தீவிரமாக ஈடுபட்டனர். இச்சங்கம் சாதி, சமய இன வேறுபாடுகள் எதையும் பாராட்டாது எல்லோரும் மனித குலத்தவர் எனும் செழுமை பொருந்திய தத்துவத்தை ஓம்பி வளர்ந்தது. நாட்டின் நலனே மேலானது எனும் கருத்தினை உந்தப்பட்ட தம்பர் அவர்களின் அரசியற் கருத்துக்களும் கொள்கைகளும் நாடெங்கிலும் சங்கொலித்தது. காந்தியடிகளின் தத்துவக் கருத்தினாலும் சாத்வீக மார்க்கத்தினாலும் ஆட்கொள்ளப்பட்ட பல இலங்கை இளைஞர்களுள் இவரும் ஒருவராவர்.

நமது தாய் நாட்டின் கடந்த அரைநூற்றாண்டுகால கல்வியின் வரலாற்றில் ஆசிரியப் பெருந்தகை, கல்வி நெறியாளர் தம்பர் அவர்களின் வாழ்கை ஒரு பகுதி என்று கொள்வது சாலவும் பொருந்தும். அன்னைமொழிக்கல்வி, அன்னைமொழி மூலம் விஞ்ஞானக்கல்வி, இலவசக்கல்வி ஆகிய முற்போக்குக் கல்வி நெறிகள்மூலம் நமது நாடு ஒரு சமதர்ம சமுதாயத்தினை உருவாக்க விளைந்து கொண்டிருந்தது. இக்காலத்தில் இந்நெறிகள்பால் எழுந்த இயக்கத்துக்குத் தத்துவார்த்த உயிர் அளித்தவர்களுள் தம்பர் அதிசிறந்த இடம்பெறுபவராவர். இவ் வெண்ணங்களை உருவாக்கிய சிந்தனையாளர்கள் வடஇலங்கையில் வாழ்ந்த தம்பர் சகாப்தத்தினர் என்றும் கொள்ளலாம்.

இக்காலமே தவத்திரு விபுலானந்த அடிகளார் இராமகிருஷ்ண பகவானின் சமரச சன்மார்க்க தத்துவ நெறிகளால் ஆட்கொள்ளப்பட்டுத் துறவறம் பூண்ட காலம். இராமகிருஷ்ண விவேகானந்த வேதாந்தம் இலங்கைத் திருநாட்டிற் பரவி யாழ்ப்பாண நன்னாட்டில் வேரூன்றியகாலம் யாழ்ப்பாணத்தில் பல இளைய அறிஞர்கள் இராமகிருஷ்ண, விவேகானந்த வேதாந்தத்தினால் கவரப்பட்டனர். கிறிஸ்துவத்தவராயிருந்தஆசான் தம்பர், குறிப்பிட்ட எந்தச் சமயக் கொள்கையையும் அனுட்டிக்காத போதும் அவரது இதயத்தில் ஆழ்ந்த சமய நிலை குடி கொண்டது. சமரசமனப்பான்மை மேலோங்கியது. வேதாந்த இலட்சியத்தினால் உருவாக்கப்பட்ட அவரது உள்ளம் நெஞ்சை உருக்கும் திருவாசகம், சமரச சமத்துவ நோக்கினை, உலக நெறியினைக்



கொண்ட உலகநெறிக் கருத்துக்கள், செறிந்த தாயுமானவர் பாடல்கள், பல சமய அனுபூதிமான்களின் சிந்தனைகள், ஆத்மீக ஒளியாம் யோக சுவாமிகள் ஆகியோரின் கருத்துக்கள் ஆகியவற்றினால் அருள் கொள்ளப்பட்டு ஒரு சிறந்த அனைத்துலகச் சமயவாதியானார்.

பல்கலை விற்பன்னரான, சமூகத்தோடு ஒட்டி சமூக மனிதனை ஆசிரிய மாமணியாக இந்நாட்டு வரலாற்றில் உன்னத இடம்பெற்றார் என்று பேராசானுக்குஅஞ்சலிசெலுத்துவோம்.

கச்சதீவு உற்சவம்-

### வள்ளங்கள் பரிசோதனை

[புலோலி]

கச்சதீவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்ல அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்கப்பட்டது சம்பந்தமாக இயந்திர வள்ளங்கள்; பருத்தித்துறை மயிலிட்டி, ஆகிய துறைமுகங்களில் வைத்து பரிசிலனை செய்யப்பட்டன.

பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகளால் பரிசிலனை செய்யப்பட்ட பருத்தித்துறை மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இயந்திர வள்ளங்களுக்கு கச்சதீவிற்கு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதற்கும், திருப்பவும் ஏற்றி வருவதற்குமான அனுமதிப் பத்திரங்கள் இம்மாதம் 23-ம் திகதி வழங்கப்படும்.

### சுமுகமான தீர்வு

[புலோலி]

கடந்த 3 வருட காலமாக புலோலி கிழக்கு சந்தாதோட்டம் முதலி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ உபயகாரர்களுக்கிடையே ஏற்பட்டுவந்த தகராறு சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்திரு. நிஹால் ஜெயசேகரா புலோலி தெற்கு இராமசேவை அலுவலர் திரு. கே. வேலாயுதம்பிள்ளை ஆகியோர் முயற்சியைத் தொடர்ந்து உபயகாரர்களின் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

# வியட்நாம்மீது சீனு பெரும் தாக்குதல்

## நூற்றுகணக்கில்சீனரும்பலி

லண்டன், பெப். 18

சீனு வியட்நாம் மீது பெருமளவிலான தாக்குதலே நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கடும் சண்டையில் வியட்நாமியப் படைகளுக்குப் பலத்த சேதம் உண்டாகியுள்ளபோதிலும் நூற்றுக்கணக்கான சீனத் துருப்புகளும் கொல்லப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புச்சபையைக் கூட்டுமாறு ஐ. நா. பொதுச் செயலாளரை வியட்நாம் கோரியுள்ளது.

### உக்கிர சண்டை

சீனு வியட்நாம் மீது பெருமளவிலான தாக்குதலேத் தொடங்கியதனையடுத்து உக்கிர சண்டை மூண்டுள்ளது.

சீன எல்லேக்குள் வியட்நாம் ஊடுருவல் நடத்தியதாலேயே தாம் இப்பதில் நடவடிக்கையை எடுக்க நேரிட்டதாக பீக்கிங் அறிக்கைகள் தெரிவித்தன.

நான்கு முனைகளிலும் பலத்த சண்டை நடந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

விமானப்படைத் தாக்குதல்கள், தரைப்படை, பீரங்கிப் படைத் தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாக ஹனேய் அறிக்கைகளிலிருந்து தெரியவருகிறது.

### வியட்நாம் குற்றச்சாட்டு

தமது எல்லேக்குள் சீனு ஆறு மைல்கள்வரை ஊடுருவல் நடத்தியுள்ளதாக வியட்நாம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆக்கிரமிப்பாளர்களே வெளியேற்ற உதவுமாறு வியட்நாம் ஐ நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட் ஹெய்மைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பாதுகாப்புச் சபையைக் கூட்டுமாறும் வியட்நாம் கோரியுள்ளது. ரஷ்யாவும் ஏனைய நட்புறவு நாடுகளும் வியட்நாமுக்கு உதவ முன்வந்துள்ளதாக அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது.

வியட்நாமியப் படைகளுக்கு சீனத் தாக்குதல்களால் பலத்த சேதங்கள் உண்டாகியுள்ள போதிலும் சீனர்களும் நூற்றுக்கணக்கில் கொலேலப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

## ப. வி. இ. தலேவருடன் கொமெய்னி சந்திப்பு

தெஹ்ரான். பெப். 18

ஈரானின் சமயத் தலேவர் அயத்துல்லா கொமெய்னி தெஹ்ரானில் பலஸ்தீன விடுதலே இயக்கத் தலேவர் ஜஸைப் யாஸிர் அரபாத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

இதேநேரம், ஈரானின் முன்னுள் பிரதமர் [மன்னரின் ஆதரவாளர், பக்தியார் அல்ல] ஒருவர் உட்பட 21 சிரேஷ்ட அதிகாரிகள் மீதான விசாரணே நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

ஈரானில்

## எண்ணெய் ஏற்றுமதி தற்போது சாத்தியமில்லே

தெஹ்ரான். பெப் 18

ஈரானில் வேலேநிறுத்தம் செய்துவந்த 30,000 தொழிலாளர்களில் பெரும்பாலானேர் வேலேக்குத்திரும்பிவிட்ட போதிலும் எண்ணெய் ஏற்றுமதி தற்போதைக்கு சாத்தியமில்லே என்று தெஹ்ரான் அறிக்கைகள்தெரிவிக்கின்றன.

இதேவேளே ஈரானிலிருந்து அமெரிக்க-பிரிட்டிஷ் பிரஜைகள் வெளியேறிவருகின்றனர். [உ]

## காகிதஆலே நிறுவுவதில் அரசு தாமதப் போக்கு

### ஆற்காடு வீராசாமி கண்டனம்

சென்னே, பெப். 18

"தமிழகத்தில் காகித ஆலே நிறுவப்பட்டு ஏராளமானேருக்கு வேலேவாய்பளிக்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்திருந்தது. ஆனுல் இதற்கான அனுமதியை மத்திய அரசிடம் தமிழக அரசு இப்போதுதான் கோரியுள்ளது. இக் காகிதஆலே எப்போது அமைக்கப்பட்டு எப்போது வேலேவாய் பளிப்பது?"

இவ்வாறு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணே மீது தமிழக சட்ட மேலவையில் நேற்று தொடர்ந்து ஆருவது நாளாக நடைபெற்ற விவாதத்தில் ஆற்காடு வீராசாமி பேசுகையில் கேள்வி எழுப்பினுர் இவ்விவாதத்தில் நேற்று தி. மு க. உறுப்பினர் திரு நீல நாராயணன் உட்பட பல உறுப்பினர்கள் உரையாற்றினர். [உ]

தமிழகம் -- புதுச்சேரி:

## இணைப்பு முயற்சிக்கு எம். ஜி. ஆர். எதிர்ப்பு

சென்னே. பெப். 18

தமிழகத்துடன் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை இணைக்கும் முயற்சியை தமிழக முதல்வர் திரு எம், ஜி இராமச்சந்திரன் வன்மையாக எதிர்க்கிருர்

இவ்வாறுபுதுச்சேரியின் முன்னுள் முதல்வர் திரு எஸ். இராமசாமி காரைக்காலில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினுர்.

சுயநலமிகளே புதுச்சேரி பிரதேசத்தை அண்டைநாடுகளுடன் இணைக்குமாறு கிளர்ச்சி செய்துவருகிருர்கள் என்றும் அ இ அ தி. மு கவை பிரிக்கவே அவர்கள் விரும்புகிருர்கள் என்றும் திரு. இராமசாமி கூறினுர்.

மக்களின் விருப்பமின்றி இந்த இணைப்பு நடைபெற மாட்டாது என்று ஏற்கனவே திரு எம். ஜி. இராமச்சந்திரன் கூறியுள்ளார் என்றும் திரு. இராமசாமி கூறினுர். (இ)

## திருமலேக் கச்சேரியில். தீ!

[திருகோணமலே]

திருகோணமலேக் கச்சேரி காணிப்பதிவு அலுவலகத்தில் இருதினங்களின் முன் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது

இரவு சுமார் 9 மணிக்கு பற்றிய இத் தீ மின்சாரக் கோளாறு காரணமானதா? அல்லது சதியா? என்பது பற்றிப் பொலிசார் விசாரணே செய்துவருகின்றனர்.

சேதம் பற்றிய தகவல் இன்னமும் கிடைக்கவில்லே. (ம)

## கோழித்தீனுக்கு தட்டுப்பாடு

[புலோலி]

வடமராட்சிப் பகுதியில் கோழித்தீனுக்குப் பெரும் தட்டுப் பாடேற்பட்டுள்ளதால் கோழிப்பண்ணேயாளர்கள் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

இங்குள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போதியளவு கோழித்தீனைக் கொள்வனவு செய்வதில்லேயென்றும் இதனுலேயே கோழித் தீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்றும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ம. கி. பிரச்னே:

## சமரஸப் பேச்சில் சலுகைகள் இரா

### எகிப்து அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 18

எகிப்தும், இஸ்ரேலும் அடுத்தவாரம் கேம்ப்டேவிட்டில் மீண்டும் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளபோதிலும் இத்தடவை எகிப்து எவ்வித சலுகைகளேயும் அளிக்காது என்று எகிப்திய ஜனுதிபதி அன்வர் சதாத் அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வமாக எகிப்து இதனே அறிவித்துள்ளது. [உ]

"தமிழர் பிரதேசங்களில்

## பிரதேச சபை அமைக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் உள்ள பாரம்பரியத் தமிழ்ப்பிரதேசங்களுக்கு ஒரு பிரதேசசபை அமைக்கப்படவேண்டும். எதிர்க்கட்சியினர் இச்சபையில் தமது குறைகளே எடுத்துக்கூறி பரிகாரம் காணக்கூடியதாக இருக்கும்."

இவ்வாறு லங்கா-பாரத ஒற்றுமைமுன்னணி அமைப்பாளர் டாக்டர் ஏ. தர்மலிங்கம் ஜனுதிபதி திரு.ஜே ஆர் ஜெயவர்த்தனுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் ஆலோசனே தெரிவித்திருக்கிருர்.

இக்கடிதத்தில் அவர்மேலும் கூறியிருப்பதாவது!

"தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரசாங்க திணேக்களங்களிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் கூட்டுஸ்தாபனக்கிளேகளிலும் பாடசாலேகளிலும், கூட்டுறவுச்சங்கங்களிலும், இவைபோன்றவேறு பலஸ்தாபனங்களிலும் ஊழல்கள் மலிந்துவிட்டன. இருந்தும் தங்கள் அரசாங்கம் இவற்றைக் களேய எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கச் சக்தியற்றநிலேயில் இருக்கிறது.

தமிழர் பிரச்னே தீர ஒரே ஒரு மாற்றுவழி இலங்கையில் உள்ள பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒரு பிரதேச

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பலன்

மாசி மாதம் 7ம் திகதி (19-2-1979)

திங்கட்கிழமை

மேடம்: முக்கியமான விடயங்களே இன்று பின்போடுவது விரும்பத்தக்கது. உள்வீட்டிலேயே களவுவேலே நடைபெறலாம், பகைவர்களின் நடவடிக்கை இறுதிவரை பரம இரகசியமாகவே இருக்கும், உசார் நிலே விரும்பத்தக்கது.

இடபம்: அன்பின் பிணேப்பு உங்களேப் பரவசத்தில் ஆழ்த்தும், களஸ்திரவழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும், வெளியிடத்தொடர்புகளிலும் நன்மையான மாற்றங்கள் உண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்: பணத்துடன்பழகுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், திருடர் பயத்திற்கு இடமுண்டு, இனிக்கப் பேசுபவர்களே நம்ப வேண்டாம், கடமையில்அதிக கவனஞ் செலுத்தவும்.

கடகம்: உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர் வழிக்கு வழி காண்பீர்கள், மேவிடத்துஉறவுஉற்சாகத்தை அளிக்கும், பிதாவழிமூலம் தகுந்த உதவி கிடைக்கும், தாராளசிந்தையுடன் நடந்து கொள்வீர்கள்.

சிங்கம்: செய்தொழில்மூலம் சிறப்புக்கள் கிடைக்கும், பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு, போட்டாபோட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும், விளேயாட்டு வீரர்கள் முதலிடத்தைப்பெறுவர்.

கன்னி: நிதி நிலேயில்விரும்பத்தக்க முன்னேற்றம்காணப்படுகிறது, வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப்பெறுவார்கள், புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள், புத்திரர்களாலும் புகழ் குவியும்.

துலாம்: முன்னேற்றப் பாதையில் இரும்புத்திரை தொங்கவிடப்படுகிறது, அதிக அலேச்சலுக்கும் இடமேற்படலாம், உடல்நலம் சிறிதுபாதிக்கப்படலாம், வாய்வுப்பதார்த்தங்களேத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்: வாழ்க்கையில் சிரமங்கள் அதிகரிக்கும், குறுக்குவழியில் இறங்குவதால் வழக்கு விவகாரங்களில் சிக்கிக்கொள்ள நேரிடலாம், அதிகப் பேச்சைத் தவிர்த்து அமைதியுடன் இருக்கவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைநல்லது.

தனுசு: மனே வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், நீண்டநாள் பிணி நீங்குவதற்கும் இடமுண்டு. போதுமென்றமனம் உங்களுக்குப் பெருமையைத் தேடித்தரும், மேடைப்பேச்சாளர் சிறப்படைவர்.

மகரம்: உண்மை இன்று ஊமையாகிவிடும், உதவி செய்யச்சென்று உபத்திரவத்தை விலேக்கு வாங்கிக் கொள்வீர்கள், சிலர்வாழ்க்கையில் பணமுடை அதிகரிக்கலாம், செலவு வகைகளேக் கட்டுப்படுத்திக்கொள்ளவும்.

கும்பம்: நீண்டநாட்களின் பின்பு நிம்மதியான வாழ்க்கை இன்று கிடைக்கும், கல்வித் துறையில் முன்னேற்றமுண்டு, மாதுருவழியால் அதிக ஆதரவு கிடைக்கக்கூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் பிறக்கும், நல்லதினம்.

மீனம்: இன்பத்தின் அணேப்பில் இதயத்தைப் பறிகொடுப்பீர்கள், பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காதல் கணே தாக்கும், குடும்பஸ்தர்களுக்கும் சுவையான சம்பவங்கள் உண்டு, க்வர்ச்சிகரமான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலே க. வேலுப்பிள்ளே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
பாட்டும் பரதமும்

Rio (Jaffna)
Phone: 76?7
Daily 4 Shows
THE LOOTERS

## பிராதச...

[4ம் பக்கத் தொடர்ச்சி)

சபையை அமைப்பதேயாகும்.

எதிர்க்கட்சியினர் இப்பிரதேச சபையில் தமது குறைகளை எடுத்துக்கூறிப் பரிகாரம் காணக்கூடியதாக இருக்கும்.

நாம் நேர்மையின் நீதியின் திறமையின் அடிப்படையில் ஆளப்படவிரும்புகின்ருேம். இவ்வாறு ஒருபிரதேச சபையின்றி ஒருதமிழன் மற்றத் தமிழர்களுடன் நிம்மதியாக வாழ முடியாது. ஆகவே சபை அமைத்துத்தந்துதவ உடனடிநடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ளவேண்டும்.'' [உ]

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

6-வது வெற்றி வாரம்
ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

9-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி நடித்த
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
டைரக்ஷன் ; A. பீம்சிங்

REGAL (Jaffna) Now Showing
Daily at, 4-30, 7-00 & 9-30
BRAD HARRIS - JOEWORKER
in
SO DARLING SO DEADLY
Action Spy Film (Color)
விநாடிக்கு விநாடி திகிலூட்டும் சண்டைக் காட்சிகள் நிறைந்தபடம்.

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
ஈஸ்ட்மன் கலர் [புதிய பிரதி]

Shanthi - (Jaffna) Phone-7642
3nd Crowded Week!
10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adults — Eastman Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி; 2-00, 6-00 & 9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00 6-00 & 9-30
எம். ஜி. ஆர். — பத்மினி
மதுரைவீரன் (புதிய பிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ்நகர்) ஆசை அறுபதுநாள்

# மனைவி பணம் கேட்டு ஏசியது பொறுக்கவில்லை

## நஞ்சை நாடினாராம் கணவர்

[பண்டத்தரிப்பு[

குடிபோதையில் வந்த கணவரிடம் செலவுக்குப் பணம் கேட்டுப் பேசினாராம் மனைவி. இதைத்தாங்கமுடியாமல் அந்தக்கணவர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்துள்ளார்.

குடிபோதையில் வீடு திரும்பிய கணவரிடம் வீட்டுச் சாமான்கள் வாங்குவதற்கு பணம் கேட்டாராம் மனைவி.

தன்னிடம் காசு இப்போது இல்லை என்று கணவர் பதில் சொல்லவே ''வீட்டைக் கவனிக்காமல் மது அருந்தி வீண் செலவு செய்கின்றீர்களே'' என்று மனைவி முணுமுணுத்தாராம். இதைப் பொறுக்க முடியாத பிரஸ்தாப நபர் தமது தோட்டத்திற்குச் சென்று கிருமிநாசினியை எடுத்துகுடித்துதன்னுயிரைமாய்த்துக்கொண்டாராம் இளவாலைப் பகுதியிலுள்ள மக்குவில் என்னுமிடத்தைச் சேர்ந்த சூசைதாஸீது என்னும் 40 வயது நபரே இவ்வாறு இறந்தவராவார். இவரது மரண விசாரணை பண்டத்தரிப்புப்பிரிவுதிடீர் மரணவிசாரணைஅதிகாரிடாக்டர்அல்போன்ஸ் அத்தனுசியார்முன்னிலையில் நடைபெற்றது அப்போது காலம் சென்றவரின் மனைவி மாக்ரட் என்பவர் சாட்சியமளிக்கும் போது தெரிவித்ததாவது:-

''காலம் சென்ற எனது கணவர் தினமும் குடிபோதையில் வீடுவருவார் வீட்டுச் செலவுக்கு நான் சம்பவதினம் காசு தருமாறு கேட்டபோது இப்போது என்னிடம் பணம் எதுவும் இல்லை என்றார் நான் வீட்டுக்குத் தேவையான அரிசி முதலான பொருட்கள் வாங்கவேண்டும் அதற்குப் பணம் இல்லை. நீங்கள் வீணை குடித்து செலவழிக்கிறீர்களே என்று சொன்னேன். சிறிது நேரத்தில் என்னை ஏசிக் கொண்டுதோட்டப்பக்கமாகச் சென்றார். பின்பு சிறிது நேரத்தில் அயலவர்கள் வந்து கணவர் தோட்டத்தில் மயங்கிய நிலையில்கிடப்பதாகக் கூறினார்கள். நான் உடனே அங்கு ஓடிச்சென்று பார்த்தபோது அவர் இறந்திருக்கக் கண்டேன்'' இறந்தவர் அருந்தியதாகக்கூறப்படும் கிருமிநாசினி போத்தலும் மரண விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கிருமிநாசினி அருந்தியதினால் ஏற்பட்ட தற்கொலைச் சம்பவம் என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். சாட்சிகளை சங்கானைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. டி யு. தர்மபால ஆஜர்செய்தார்.

## புற்று நோயாளர் கஷ்டம்

### யாழ். எம். பி. நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவொன்றை நிரந்தரமாக ஏற்படுத்தும்படியும் புற்றுநோய் வைத்திய அதிகாரி ஒருவரை விரைவில் நியமிக்கும்படியும் கோரி யாழ்ப்பாணம் எம். பி திரு வெ யோகேஸ்வரன் சுகாதார அமைச்சருக்குத் தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார்.

கடந்த நான்கு வாரங்களாக புற்றுநோய் வைத்திய அதிகாரி யாழ். வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட வராததால் நோயாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை எம். பி. அமைச்சருக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார்,

## 'கிரியைகளின் உட்பொருள் விளக்கியவர்'

'சிவஸ்ரீ நவீன கைலாயநாதக் குருக்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு புரிந்து சீரிய வாழ்வு வாழக் கண்டவர். அவர் கிரியைகளைக் கருத்துடன் விளக்கிச் செய்பவர், கிரியைகளின் உட்பொருட்களை பிரசங்க மூலம் விளக்கியதும் உண்டு. திருக்கேதீஸ்வரம் போன்ற பிரபல்யமான கோயில் முதலாக சாவகச்சேரி மண்டுவில் அம்மன் கோயில் ஈறாக பல சைவக் கோயில்களின் கும்பாபிஷேகங்களைச் செப்பமுற நடத்தி நாட்டையே அதன் மூலம் வளங்கொழிக்கச் செய்தவர்'

இவ்வாறு சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அம்மன் கோயில் மண்டபத்தில் கோவில் புனருத்தாரண சபை ஆதரவில் அதன் தலைவர் திரு க. சரவணமுத்து தலைமை தாங்கி நடந்த இரங்கற் கூட்டத்தில் ஆசிரிய மணி ஆர். ரீ. சுப்பிரமணியம் தமது உரையில் கூறினார்.

சித்தாந்த இளம் சைவப் புலவர் திரு. கு. வி. மகாலிங்கம் பேசும்போது குருக்கள் ஐயா இலங்கையில் மாத்திரம் அன்றி இந்தியா, மலேஷியா போன்ற பிறநாடுகளுக்கும் அழைப்பின் பேரில் சென்று குடமுழுக்கு விழா நடாத்தி சைவம் பேணினார்' என்றார்.

அர்ச்சகர் திருவாளர்பெரிய தம்பி கந்தையாவும், திரு. பெ. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் பேசினர். [அ]

## ஓடுகள் அன்பளிப்பு

[அரியாலை[

உரும்பராய் மேற்கு வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கான ஓடுகளை மில்க்வைற் தொழிலதிபர் சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா நன்கொடையாக வழங்கியுள்ளார்.

திரு கனகராசாவிடமிருந்து ஓடுகளை நிலையத்தலைவர் திரு. துரோணாச்சாரியார் பெற்றுக் கொண்டார். [அ[

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி—விஜயா
செல்வம்

# பருத்தித்துறை மின்சேவை: சீராக்க ஆணையாளர் உறுதி

(புலோலி)

பருத்தித்துறை நகரசபையின் மின்விநியோகத்தை மின்சார சபையிடம் ஒப்படைத்து மின்விநியோகத்தைச் சீரமைத்துத் தருமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மின்பாவனையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபை கிழக்கு தும்பளை, நெல்லண்டைப் பகுதிகளில் மின்சாரமிருந்தும், விளக்குகளையே மக்கள் பாவித்து வருகின்றனர். இரவு வேளைகளில் மின்விளக்குகள் ஒளியின்றி மங்கலாக மின்னுவதே இதற்குக் காரணமாகும்'

இம்மின் விநியோகத்தில் அதிருப்தி தெரிவித்து தும்பளை நெல்லண்டைப் பகுதி மின்பாவனையாளர்கள் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிட்டுள்ளதுடன்பருத்தித்துறை நகரசபையின் மின்விநியோகத்தை இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைத்து மின்விநியோகத்தை சீரமைத்துத் தருமாறு கோரியிருந்தனர்.

## ''கூட்டுறவுஊழியருக்கும்

# சம்பளஉயர்வு வழங்க வழிசெய்ய வேண்டும்''

## அமிர்தலிங்கம் விருப்பம்

(பண்டத்தரிப்பு)

''கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அரசாங்கஊழியர்களுக்கும், மற்றைய ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட 50 ரூபா சம்பள உயர்வு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு வழங்கப்படாமலிருப்பது கவலைக்குரியதாகும். வாழ்க்கைச் செலவு உயர்வுப்பிரச்னையால் கூட்டுறவுச்சங்க ஊழியர்களும் பாதிக்கப்பட்டிருப்பதால் இச் சம்பள உயர்வை வழங்குவதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். இதனால் ஏற்படும் மேலதிக செலவை ப.நோ.கூ. சங்கங்கள் புதியதைத்தொழில்களை ஆரம்பித்து நடாத்தி நிவர்த்தி செய்து கொள்ளலாம்''

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம். பி யுமான திரு. அ. அமிர்தலிங்கம் அளவெட்டி-மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் மல்லாகத்தில் புதிதாக நிறுவப்பட்ட இரும்பு விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சங்கத்தலைவர் பண்டிதர் திரு க நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் 'காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச்சபையின் நிர்வாகத்திலுள்ள மல்லாகம் கோழிய பண்ணையையும், தொழிலகத்தையும் அளவெட்டி மல்லாகம் ப நோ கூ சங்கம் பொறுப்பேற்று நடத்தினால் இலாபத்துடன் இயங்கக் கூடியதாக இருக்கும்' என்று தெரிவித்தார். திரு சிறிமுருகனும் இவ்விழாவில் உரையாற்றினார்.

...

## கடத்தப்பட்ட காட்டுவிறகு

[புலோலி]

உழவு இயந்திரத்தில் உத்தரவுப்பத்திரமின்றி காட்டு விறகுகளைக் கடத்திச்சென்றதாகக் கூறப்படும் உழவு இயந்திர உரிமையாளர் ஒருவர், பருத்தித்துறைப் பொலிசாரிடம் மாட்டிக்கொண்டார்.

பருத்தித்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு.எஸ்.மாணிக்கராசா, உழவு இயந்திரத்தில் உத்தரவுபபத்திரமின்றி காட்டு விறகுகளைக் கடத்திய உழவுயந்திர உரிமையாளரை கைது செய்து காட்டு விறகுகளுடன் கூடிய உழவு இயந்திரத்தைக் கைபபற்றி பருத்தித்துறைநீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தார்,

இவ்வுழவு இயந்திர உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கிணங்க அந்த உழவு இயந்திரத்தை ஏன்பறிமுதல் செய்யக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# "குருநகர்ப் பகுதியில் வேறெந்தக் குடியேற்றத்திற்கும் இடமளிக்கமாட்டோம்" யாழ். எம். பி.

(அரியாலை)

"குருநகரிலுள்ள றெக்கிளமேசன் பகுதியில் 100 வீடுகளைக் கட்டி வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதனை நிறுத்தி அங்கு கட்டப்படும் வீடுகளில் ஐம்பது சதவீதத்தை அரசாங்க ஊழியர்களுக்கும், மிகுதியை இராணுவத்திற்கும் ஒதுக்கிக்கொடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இப்பகுதியில் வேறு எந்தக் குடியேற்றமும் நடக்கவிடமாட்டோம். எம் கையில் அதிகாரம் இல்லாததினால் நாம் எதையும் சாதிக்கமுடியாத நிலையில் இன்று இருக்கிறோம் எமது மக்கள் பூரண விடுதலைபெற்று ஏனைய மக்களோடு சரிசமமாக வாழ நாம் திடசங்கற்பம் செய்யவேண்டும்"

இவ்வாறு எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வே சின்னையா தலைமையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இருக்கும் சாதிசமய பேதங்களை நாம் அகற்ற வேண்டும், சாதிபேதத்தினால் எம்மினம் அழிந்துபோகிறது. எமக்குள் வேறுபாடுகள் தோன்றி எமது முன்னேற்றத்தைத் தடுக்கிறது. நாம் ஏனைய மதங்களை மதித்து நடக்கவேண்டும்.

''தமிழ்மக்களின் பிரச்னைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. நமது ஐக்கியத்தின்மூலம் தமிழ் மக்களின் பிரச்னைகளை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். எமது பிரச்னைகள் குறித்து எமது தலைவருடன் இந்தியப்பிரதமர் ஒன்றே கால் மணி நேரம் பேசி அறிந்துகொண்டார். அமெரிக்க பிரமுகர் எமது பிரச்னைகளை அறிந்து சென்றுள்ளார். உலகின் பிரதான மன்றமாக மதிக்கப்படும் ஐக்கியநாடுகள் சபையிலும் எமது பிரச்னை பேசப்பட்டுள்ளது. உலகின்கவனம் இப்போது எமது பக்கம் திரும்பியுள்ளது என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது''

நிலையச் செயலாளர் திரு. க, நாகராசா வரவேற்புரை நிகழ்த்தினார். அத்துடன் சனசமூகநிலையத்தின் தேவைகள் குறித்த மகஜரொன்றைக் கையளித்தார்

யாழ் மாநகர விசேடஆணையாளர் திரு. கே சிவஞானம், சட்டத்தரணி அ விசுவநாதன், ஜைப் எம் எம் ஏ முகம் மதுராசா ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர். [ஈ]

## சர்வதேச இயக்கங்களிடம் ஆதரவு கோரித் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை அரசு அமுல்நடாத்தவிருக்கும் இனவாரித் தரப்படுத்தலை நீக்குமாறு கோரி குரல்கொடுக்குமாறு சர்வதேச இனவிடுதலை இயக்கங்களையும் மாணவர் இயக்கங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி கோரி; ''சர்வதேச சிறுவர் ஆண்டுக் கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன,

கருத்தரங்கு நேற்று முன்தினம் மாலை தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனையில் டாக்டர் அசெ தர்மலிங்கம்தலைமையில் நடைபெற்றது, நிறைவேற்றபபட்ட தீர்மானம், ஐ நா சார்பு இயக்கத்தலைவர்களுக்கும், சர்வதேச விடுதலை இயக்கப் பிரமுகர்களுக்கும் மாணவர் இயக்கங்களுக்கும் அனுப்பி வைக்கபபட்டுள்ளன, [கெ]

# "நாம் பெற்ற கல்வி நமது நாட்டுக்கே பயன்படவேண்டும்"

## 'வித்தி' நூல் வெளியீட்டு விழாவில் 'நந்தி'

(கொக்குவில்)

"நாம் கற்ற கல்வியை நமது நாட்டுக்குப் பயன்படுத்தவேண்டும். இந் நாட்டில் கல்வி கற்ற பல தமிழ் டாக்டர்கள். பொறியியலாளர்கள் பணத்தைச் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக்கொண்டு நைஜீரியா, ஸாம்பியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல தேசங்களுக்குச் சென்று அங்கு தொழில்செய்கிறார்கள்''

இவ்வாறு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் 'தமிழியற்சிந்தனை' நூல்வெளியீட்டு விழாவில் பங்குபற்றி உரையாற்றிய மருத்துவபீடப் பேராசிரியர் 'நந்தி' பேசுகையில் தெரிவித்தார். முத்தமிழ் நூல் வெளியீட்டுக்கழகம் இந்நூலை வெளியிட்டது.

இவ் வெளியீட்டு விழா பேராசிரியர் அ, சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் நந்தி தொடர்ந்து பேசுகையில் பணம் சம்பாதிப்பதுதான் எமது நோக்கமென்றால் கஷ்டப்பட்டுப் படித்து டாக்டர்களாகவோ அன்றி பொறியியலாளர்களாகவோவரவேண்டியதில்லை. மத்தியகிழக்கிற்குச் சென்று தோட்டவேலையோ ஆயாவேலையோ செய்தால் கூடுதலான பணத்தைப் பெறமுடியும் என்று கூறினர்.

### பாகுபாடற்ற பண்பாளன்

எழுதுவினைஞர் சங்கச்செயலாளர் எஸ். மெற்றுஸ்மயில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'கல்வி, செல்வம் படைத்த பெரியவர்களில் பலர் அந்தஸ்து என்னும் நோய்க்கு அகப்பட்டுத் தமது சமூகத்தில் இருந்து ஒதுங்கிவாழ்கிறார்கள். ஒருசிலரே இந்நோயிக்கு அகப்படாது, சமூகத்தில் நிலையான இடத்தைப் பெற்று மக்களோடு மக்களாக மதிப்போடு வாழ்கிறார்கள். அவர்களில் துணைவேந்தர் வித்தியானந்தனும் ஒருவராக விளங்குகிறார்.

"ஏழை — பணக்காரன், பாமரன்—படித்தவன், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பேதமின்றி குடிசை வாழ் மக்களோடும். மாளிகைவாசிகளோடும் பாமரர்களோடும் படித்துப் பட்டம்பெற்றும் பதவிவகிப்போரோடும் சரிசமமாகவே வாழ்ந்துவருகிறார். அதனால்தான் எல்லோருடைய அன்பையும் அவரால் பெறமுடிந்தது.

அவரிடம் கல்விகற்று இன்று உயர்பதவி வகிப்பவர்களும் அவருடைய வழியில்சென்று மக்களின் அன்பைப்பெற வேண்டும். அதுதான் நாம் எமது குருவிற்குச் செய்யும் கைமாறாகும்.

இன்று எம் மத்தியில் அடித்தளத்தில் வாழும் மக்களுக்கும், மேல்மட்டத்தில் வாழும் மக்களுக்கும் இடையேயுள்ள பெரிய இடைவெளியை அகற்றாது எமது சமுதாயத்தில் எதையும் சாதித்துவிடமுடியாது

தமிழ்ஈழத்தை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாம் எம் மத்தியில் உள்ள இவ் ஏற்றத்தாழ்வுகளைப் போக்காதவரையில் எமது விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெறமுடியாது. எனவே எமது அரசியல் தலைவர்களும் திரு. வித்திகாட்டிய வழியில்சென்று எம் மத்தியிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கமுன்வர வேண்டும்.

வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி மாணிக்கவாசகர், சொக்கன், திரு. கலா பரமேஸ்வரன், கலைப் பேரசு ஏ ரி பொன்னுத்துரை ஆகியோரும் பேசினர், (அ)


## வெற்றிடங்கள்

16, 17, 18 கேஜ் (Guage) அலுமினியம் தகடு ஒட்டக்கூடிய ஆட்கள் (Welders) தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.

டொலர் அலுமினியம் தொழிற்சாலை

மாவிட்டபுரம். 1676


## மரண அறிவித்தல்

### நடராச ஐயர்

அங்கணம் மைக்கடவை மீனாட்சி அம்மன் கோவில் பிரதம குருக்கள் கந்தரோடை பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் கார்த்திகேசுஐயர் (நடராச ஐயர்) காலமானார். ஈமக்கிரியை இன்று திங்கட்கிழமை கந்தரோடை மயானத்தில் நடைபெறும்.

தகவல்;- சேதுமாதஐயர், 1685

## சீன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றும் ஐ. நா இரு நாடுகளையும் கேட்டிருக்கிறது. இதேபோன்று இந்த இரு நாடுகளுக்கும் ஆஸ்திரேலிய அரசும் இன்று வேண்டுகோள் விடுத்தது. சீன-வியட்நாம் எல்லையில் யுத்தம் மூண்டிருப்பது குறித்து அமெரிக்க அதிபர் திரு. கார்ட்டர் தமது அதிகாரிகளுடன் இன்று அவசர ஆலோசனை நடத்தினார்.

### சோவியத் கண்டனம் சீன விளக்கம்

வியட்நாம் எல்லைக்குள் சீனப்படைகள் புகுந்து நடத்திவரும் தாக்குதல் அப்பட்டமான ஆக்கிரமிப்பென்று சோவியத் ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது. வியட்நாம் ஆரம்பித்த தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதலையே சீன மேற்கொண்டிருப்பதாகவும், தேவையான அளவுக்கு மேல் சீனத் துருப்புகள் வியட்நாமுக்குள் நிற்கமாட்டாதென்றும், பின்னர் அவை தமது எல்லைக்குத் திரும்பிவிடுமென்றும் சீன தெரிவித்துள்ளது. அமைதியான சூழ்நிலையையே சீன விரும்புகிதென்றும் சீன அறிவித்துள்ளது.

### சீன டாங்கிகள் அழிக்கப்பட்டன

சீனத் தாக்குதலை எதிர்த்து வியட்நாம் துருப்புகள் கடும் சண்டையிடுவதாகவும், நூற்றுக்கணக்கில் சீனர்கள் கொகல்லப்பட்டுள்ளதாகவும் 46 சீன டாங்கிகள் அழிக்கப்பட்டு விட்டதாகவும் வியட்நாம் வானொலி தெரிவித்தது. தங்கள் தரப்பின் சேத விபரங்கள்பற்றி வியட்நாம் வானொலி தெரிவிக்கவில்லையாயினும் உயிர்ச் சேதமும், உடமைச் சேதமும் ஏற்பட்டிருப்பதாகக் கூறியது. சேத விபரங்கள் பற்றிச் சீன விபரங்கள் எதையும் அறிவிக்கவில்லை.

## ஆசிரியர்களை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விலகல் கடிதம் அனுப்பப்பட்ட ஆசிரியர்களுக்கு இம் மாதச் சம்பளத்தை வழங்குமாறு கோரி தந்தி ஒன்றை சங்கப் பொதுச் செயலாளர் த. தேவராசா வடமாநிலக் கல்விபணிப்பாளருக்கும் கல்வி இலாகாவுக்கும் அனுப்பியுள்ளார் [அ]

## தொண்டர்களை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு கருதித் தொண்டர்கள் சரியான முறையில் ஒழுங்காக கிழமைக்கு ஒருமணித்தியாலம் என்ற ரீதியில் செயற்படின் ஒவ்வொரு மாதத்திலும் 4 மணித்தியாலங்களைச் செலவிட்டாலே நிதிதிரட்டிவிட முடியும் என்றே நான் மேற்படி கூட்டத்தில் பேசினேன். கூட்டணி எம் பிக்கள் பற்றி நான் மேற்படி செய்தியில் கூறப்பட்டிருப்பதுபோல் பேசவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.'' [உ]

## இலங்கைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யால் உடனடியாக அவரை மாற்றி, வேறொருவரை நியமிக்குமாறு, சகல தேசியப் பேரவை உறுப்பினர்களையும் கோருகிறோம்.

கிளிநொச்சி, ஊர்காவற்றுறை முதலிய கஷ்டப் பிரதேசக் கல்வி வட்டாரங்களின் ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாகத் தேசியப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டத் தொடரைக் கல்வியதிபதி கூட்டவேண்டும்.

வேலைநீக்கக் கடிதங்களின் அதிர்ச்சியால் அகால மரணமடைந்த ஆசிரியர்களான ஜே. சற்குணராசா, குமாரசாமி ஆகியோரின் அகால மரணத்திற்குச் சங்கத்தின் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

வேலைநீக்கஞ் செய்யப்பட்ட சகல ஆசிரியர்களுக்கும் இம் மாதம் 28ந் திகதிக்கு முன் விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டுச் சம்பளம் வழங்கவேண்டும். வேலைநீக்கக் காலத்தைக் கடமை லீவாக அரசு கணிக்க வேண்டும். [கெ]

## பல்கலைக்கழக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கும் தலையிடியாக இருக்கிறது.

இல்வாறு இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டத் தலைவர் திரு. ச. கி. சுந்தரலிங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்றைய மாணவர்களின் நிலை, மழை விட்டும் தூவானம் நிற்கவில்லை என்ற நிலையிருக்கும்போது பிரச்னைகள் தீர்ந்துவிட்டதாகக் கருதக் கூடாது.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லத் தகுதியுடைய சகல மாணவரையும், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க வேண்டும். தடைசெய்யபட்டுள்ள ஆசிரியர்களை உடனடியாக நிபந்தனையின்றி வேலைக்கமர்த்தல்வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள் விரக்தி மனப்பான்மை ஏற்படாத அரசியல் தலையீடின்றிப் பல்கலைக்கழக அனுமதி, தொழில் வசதி, இடமாற்றம், பதவி உயர்வு போன்ற விஷயங்களில் திட்டமான கொள்கை அமைத்தல்வேண்டும். பாடசாலைப் புத்தகங்களின் விலையைக் குறைக்கவேண்டும். [அ]

## தேர்ச்சிப் பிரச்னை பற்றி இன்று கூட்டம்

[யாழ்ப்பாணம்]

சிங்களத் தேர்ச்சிப் பிரச்னை பற்றி ஆராய்வதற்காக தேசிய சுகாதார சேவைத் தொழிற்சங்கம் இன்று யாழ் ஆஸ்பத்திரியில் கூடுகிறது. இக் கூட்டத்துக்கு யாழ் எம் பி திரு வெ யோகேஸ்வரனும் அழைக்கப்பட்டிருக்கிறார்,

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுப்பிள்ளை வேலுப்பிள்ளை

காலஞ்சென்ற மலாயன்பென்சனர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் இரத்தினசபாபதி (சட்டக் கல்லூரி) டாக்டர் சரவணபவன் (ஆஸ்திரேலியா) திருமதி தம்பிராஜா (மலேசியா) திருமதி சிவகுமாரன், செல்வி புவனேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும் திருமதி தெய்வநாயகி, டாக்டர் திருமதி இரத்தினதேவி [ஆஸ்திரேலியா] தம்பிராஜா (மலேசியா) காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் மாமியுமான திருமதி பொன்னுப்பிள்ளை வேலுப்பிள்ளை காலமானார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு குட்டியாண்டி வளவில் இருந்து சுன்னாகம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 1684

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelaraadu P B No: 49, Telegrami Eelanaadu, Telephone: 889, Registered as a News Paper in Sri Lanka.-